# ★ இராணுவ ரகசியங்களை கடத்த முயன்றவர் கொழும்பில் கைது

[கொழும்பு]
இலங்கையின் இராணுவ ரகசியங்களை கடத்த முற்பட்ட மலேசிய பொறியியலாளர் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பாது காப்புவட்டாரங்கள் தெரிவித்
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 19 இதழ்: 174
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 4-8-1991

## பிரிட்டிஷ்முடிவிற்கு இலங்கை வரவேற்பு

[கொழும்பு]
விடுதலைப்புலிகளின் சர்வ தேச விவகாரப் பொறுப்பா ளர் திரு. கிட்டுவை நாட்டை விட்டு வெளியேற்ற பிரிட்டிஷ் அரசு உத்தேசித்துள்ளதை இலங்கை அரசு வரவேற்றுள்
(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் முடிவையே பிரிட்டனும் எடுத்தது

[லண்டன்]
இந்தியாவிலிருந்து ஈழத்தமி ழரை வெளியேற்ற இந்திய அரசும், தமிழக அரசும் மேற் கொண்ட முடிவையடுத்தே பிரிட்டனும் திரு. கிட்டுவை வெளியேற்ற முன்வந்ததாக
[4ம் பக்கம் பார்க்க]

## ● மட்டு-பொலநறுவவில்

# புலிகள் அதிரடித்தாக்குதல்: 25 இராணுவம் உயிரிழப்பு

## 2 உயரதிகாரிகள் பலி; 3 வாகனங்கள் தீவைப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு-பொலநறுவை மாவட்ட எல்லையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல்களில் இரு இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட இருபத்தைந்து படையினர் கொல் லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன. மூன்று வாகனங்கள் தீவைத்து கொளுத்தப்பட் டன.

மட்டக்களப்பு மாவட்டம் பன்னிச்சை இராணுவ முகாமி லிருந்து 35 க்கு மேற்பட்ட ராணுவத்தினர் வெலிகந்தை முகாமுக்கு உழவுயந்திரத்தின் உதவியுடன் முன்னேறிச் சென்றபோது பன்னிச்சை இரா ணுவ முகாமிலிருந்து ஒரு மைல் தூரத்தில் வைத்துவிடு தலைப் புலிகளின் படையணி கடும் தாக்குதலை மேற்கொண் டது.

இத்தாக்குதலில் 19 இரா ணுவத்தினர் ஸ்தலத்திலே
(4ம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தினுல்தான் வெல்லமுடியும்

(கொழும்பு)
யுத்தத்தில் எல்லோராலும் வெல்லமுடியாது. சமாதானத் தினுல்தான் வெல்லமுடியும் என ஜனுதிபதி பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை கையில்; விடுதலைப்புலிகள் இனிமேலாவது தீவிரவாதத் தைக் கைவிட்டு சமாதானத் தில் ஈடுபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## ★ ஆனையிறவு முகாமினுள்ளிருந்த காயமடைந்த படையினரை முன்னேறிய படை மீட்டது

[கொழும்பு]
ஆனையிறவு இராணுவ முகாம் மீது கடந்த 24 நாட் களாக விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்த முற்று கையை படையினர் நேற்று மாலை 6-40 மணியளவில் முறி யடித்து முகாமிலிருந்தவர்களு டன் இணைந்ததாக தெரிவிக கப்பட்டுள்ளது.

புலிகளின் கடைசித் தொகு தியை கைப்பற்ற பலமணி நேரம் மிக உக்கிரமோதல் நடைபெற்றதாகவும் மாலை 6-40மணியளவிலேயே படை யினரால் முகாமைஎட்டமுடிந் ததாகவும் எயர் மார்ஷல் வால்டர் பெர்ணுண்டோ தெரி வித்தார்.
(4ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் போரா அல்லது சமாதானமா?

[லண்டன்]
ஆனையிறவுப் போரின்பின் அரசும்-புலிகளும் தொடர்ந் தும் யுத்தம் புரிவரா அல்லது பேச்சுக்களில் ஈடுபடுவரா என் பது கேள்விக் குறியாகவே இருப்பதாக பி. பி. ஸி. தெரி வித்தது

இம்மோதலில் பெருமளவு
(4ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு துறைமுகம் உஷார் நிலையில்

[கொழும்பு]
கொழும்பு துறைமுகத் திற்கு ஆயுதங்கள்கப்பல் மூலம் கடத்தப்படுவதாக தொலை பேசி எச்சரிக்கை கிடைத்த
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். வர்த்தகர்கள் மகஸீன் சிறையில்

[கொழும்பு]
யாழ்ப்பாணத்தை சேர்ந்த வர்த்தகர்கள், லொறி உரி மையாளர்கள் 14 பேர் மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த ஒன்றரை மாதத் திற்கு முன் வவனியாவில் வைதது கைது செய்யப்பட்டு வவனியா 'ஜோசப்' முகாமில்
(4ம் பக்கம் பார்க்க)

## முகாம் வாசலில் தொடர்ந்து உக்கிரமோதல் நீடிப்பு

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவுப் பகுதியில் கடந்த 24 நாட்களில் இடம் பெற்ற யுத்தத்தில் நேற்றைய யுத்தமே மிக உக்கிரமாயிருந்த தாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன

வான், தரை வழிகளில் படையினர் தமது முழுப்பலத் தையும் பிரயோகித்து நேற்று இறுதித் தாக்குதலை நடாத்தி னர். இத்தாக்குதலுக்கு அரசு
(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்குயுத்தத்திற்கு 9000 கோடி ரூபா செலவு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அரசுக்கு இதுவரை சுமார் 9000 கோடி ரூபா செலவு ஏற் பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித் துள்ளது.

மேலும் பெருமளவு செலவு இந்த யுத்தத்தில்ஏற்படுவதால் அரசுக்கு தொடர்ந்தும் நெருக் கடி ஏற்பட்டவாறுள்ளது.
(2ம் பக்கம் பார்க்க)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் விபரம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புபொலநறுவை மாவட்ட எல்லையில் நடை பெற்ற தாக்குதல்களில் புலி களால் கைப்பற்றப்பட்ட ஆயு தங்கள் விபரம் வருமாறு:

ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கிகள்- 2 அதற்குரிய ரவைக் கூடுகள் 9, விங்குகள்
[4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## புதிய திரவ சவர்க்காரம்

மில்க்வைற் புதிய திரவ சவர்க்காரம், சகல அழுக்கு அகற்றி. சலவைக்குச் சிறந்தது. அரைப் போத்தல் ரூபா 45/-. லேபலுடன் வெற்றுப் போத்தல் தந்தால் ரூபா 2/- கழிவு. மில்கவைற், யாழ்ப்பாணம். (ஏ 1475)

## கல்வி

G C E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே யில்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுக நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி 5068)

## தரன் ஸ்ருடியோ

பாஸ்போர்ட், அடையாள அட்டை – என்லாஜ்மென்ட், கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்கள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)

## விற்பனை

நவீன எலக்ரோனிக் அக்காய் ஓடியோ டெக், எக்கோ ஈகுவலைசர், C. D. பிளேயர், எலக்ரோனிக் டப்பிங் டெக், நெஷனல் வீடியோ டெக், நெஷனல் S-1 வீடியோ மிக்சர் முதலியன விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் தொடர்புகொள்ளவும். விக்ரேஸ், இல: 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி5070)

## தவறிவிட்டது

மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி) காசோலை இலக்கம் 549560, 01-08-91 அன்று வண்ணை சிவன்கோவில் சந்திக்கும் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கும இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி-5066)

## சித்திரப் பாடம்

உயர்தரக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை 5-8-91 சித்திரம் 1 தோற்றும் மாணவ மாணவியர் பயில்வதற்கு இலகுவான சித்திரம் வினாவிடை புத்தகம், பூபாலசிங்கம், மண்டேலா, ஸ்ரீகாந், மக்மிலன், ஆல் சிலோன், தினேஷ், ஸ்ரீலங்கா, பாரதி, மிடில்பேர்க், புத்தகக் கடை, கல்வியங்காடு எங்கும் விற்பனையாகின்றது. (சி-5052)

## புலமைப் பரிசில் பரீட்சை
[ஆண்டு 5]

புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை (பத்தாவது) 4-8-91 ஞாயிறு காலை 7-00 மணிக்குச் பெற்று, விடை எழுதித் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். ஒன்பதாவது முன்னோடிப் பரீட்சை வினாத்தாளைப் பெறுதவர்களும், மாதிரிப் பயிற்சியைப் பெறுதவர்களும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி 5063]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பனம்பொருள் பயிற்சி நிலையம்
(சித்தன்கேணி)

காரைநகர் மத்தி மாதர் சங்கத்தினரால் தொல்புரத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் பனம் பொருள் பயிற்சி நிலையத்தை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. கெ. யோசேப் பார்வையிட்டார். (137)

## வடக்கு-கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு போரில் படையினருக்கு விநாடிக்கு 40,000 ரூபா செலவு ஏற்படுவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி அச் செய்தி தெரிவித்துள்ளது:

யுத்தத்தில் ஏற்படும் இராணுவ தளபாட அழிப்பு, இராணுவ உபகரண விரயம், உயிரிழப்புகளுக்கான நஷ்டஈடுகள் மற்றும் ஆயுதங்கள், வெடிமருந்துகளுக்கான செலவுகளும் இந்த 9000 கோடி ரூபாவில் அடங்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆயுத உதவி நிறுத்தம்

தற்போது இலங்கைக்கு சீனா, பாகிஸ்தான், தென் கொரியா ஆகிய 3 நாடுகளுமே ஆயுத உதவியை வழங்குகிறது, மற்றைய நாடுகள் இலங்கைக்கு ஆயுதம் விற்பதை நிறுத்தியுள்ளன. (153-சி)

## OPTICIANS

For correct dispensing of Doctors' priscription Visit Eric Ganesh Opticians, 566, Hospital Road, Jaffna. Imported frames, lenses, sunglasses and photogray day & night glasses are available for selection. (This establishment provides experienced services of former employees of Eric Rajapakse & Co.) [C-5038]

## இராசி பலன்

04 - 08 - 1991
(தமிழ்த் திகதி ஆடி 19)
ஞாயிற்றுக்கிழமை

நவமி மு. இ. 10-43 வரை பரணி காலை 7-07 வரை கார்த்திகை வைகறை 5–58 வரை, இராகு காலம் மாலை 4–34 முதல் 6 04 வரை சுப நேரம் காலை 9-04 முதல் 10-34 வரை, கார்த்திகை விரதம்.

மேடம்: இனசன விரோதம் மனச்சஞ்சலம், அகங்காரம்.

இடபம்: மனச்சந்தோசம், பொருள்வரவு, காரியவெற்றி.

மிதுனம்: குடும்ப அச்சுறுத்தல், பணமுடை, யோசனை.

கடகம்: விருந்தினர் வருகை தொழில்சிறப்பு, விடாமுயற்சி

சிங்கம்; தெய்வதரிசனம், விடாமுயற்சி, வாக்குவன்மை,

கன்னி: காரியவிக்கினம், புத்திரர்துன்பம், பொதுப்பணி

துலாம்; அற்பர் நேசம், கருத்துமுரண்பாடு, தொழில் கஷ்டம்

விருச்சிகம்: கண்ணில் ரோகம், கடன்சுமை. அவமதிப்பு.

தனுசு: விவேகமின்மை, காரியபலிதம், சகோதரர் உதவி.

மகரம்: மனச்சஞ்சலம், அதிகாரியின் சினம், ஆதாயமின்மை.

கும்பம்: பணியாள் தொல்லை, தனிமையடைதல், வெறுப்பு.

மீனம்: நோய் தணியும், குடும்பமகிழ்ச்சி, கல்வியால் சிறப்பு,

- ஜோஸ்யர்

## இன்று
(புலோலி)

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில் கடந்த வருடம் [1990] நடைபெற்ற பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சை இன்று நடைபெறுகிறது ★

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் முதலுதவிப் பயிற்சி, வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மகளிர் பிரிவில் இன்று காலை 9-00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

பயிற்சி முடிவில், கல்வித் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஏற்கனவே பயிற்சி பெற்ற அனைவரும் இதே தினம் அடையாள அட்டையுடன் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## போராளிகளுக்கு உதவி
(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரி இன்ரறக்ட் கழக மாணவிகள் காயமடைந்த போராளிகளை பராமரிக்கும் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர்.

போராளிகளுக்காக கழகத்தினால் உலர் உணவுப் பொருள்களும் சாக்குகளும் துணிகளும் சேகரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதுடன் கழக உறுப்பினர்களால் இரத்ததானமும் செய்யப்பட்டது.

## பயிற்சி நெறி
(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தினரால் நடத்தப்படும் கலைக்கூறு 1 சாரணர் பயிற்சி நெறி சங்கானை சைவப்பிரகாசமகா வித்தியாலயத்தில் நடைபெறுது. (138)


## பாவனையாளர் கவனித்து வாங்கவும்!

எங்கள் விற்பனைப் பொருளான V. S. P. நல்லெண்ணையின் தற்போதைய சில்லறை விலை ரூபா (130/-) நூற்று முப்பது மட்டும்.

(குடாநாட்டில் எல்லா இடங்களிலும்) மூடிக்கு மேல் உள்ள சீல் V. S. P. இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தி வாங்கவும் என்று பாவனையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5059)



**DHL தபால்சேவை மூலம்**
**அனுப்பப்படும் சகல தபால்களும் பாதுகாப்பாகக் கிடைப்பதாக பலரும் எழுதியுள்ளனர் . . . . .**

உங்கள் உறவினரின் வெளிநாட்டு தபால்கள் உரிய நேரத்தில் கிடைக்க இன்றே எம்மிடம் ஒப்படையுங்கள்.

**DHL International**
C/o, Cosmos
Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.
DHL WORLDWIDE EXPRESS
(ஏ-1477)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



★ ★ ★ ★

அமரர்
**சங்கரன் மனோகரன்**
[சுபாஸ் உல்லாசவிடுதி பங்காளர்]

தோற்றம்: 05-06-1955 மறைவு: 05-08-1984

ஆண்டுகள் ஏழு மறைந்ததையா!
காலங்கள் உருள்வது இயற்கையையா!
கண்ணீர் தான் வருகுதையா!
கனவிலும் உங்கள் அன்புமுகம்தான்!!
கண்ணில் தெரியுதையா!
கலங்குகின்றோம் புலம்புகின்றோம்!!
யார் வருவார் ஆறுதல் சொல்ல!
சாந்தி சாந்தி ஓம்சாந்தியென
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்!

அப்பா, அம்மா,
சகோதரர், சகோதரி, அண்ணிமார்.

15, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம். [சி 5073]

# "ஆனையிறவு யுத்தம் தமிழீழத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் போர்"

[உடுவில்]

''களத்தில் பலியான போராளிகளுக்கு அஞ்சலி செலுத்திவிட்டோம் என்ற மனத்திருப்தியுடன் வீட்டில் நின்மதியாக தூங்காதீர்கள். தூங்குவதற்கான நேரமல்ல இது. எமது இனத்தை சூழ்ந்துள்ள ஆபத்தை உணர்ந்து ஒவ்வொரு தமிழ் மகனும் துடிப்புடனும் விழிப்புடனும் செயலாற்ற வேண்டிய காலம் இது.''

ஆனையிறவு- புல்லாவெளி போரில் வீரமரணமடைந்த பன்னிரண்டு போராளிகளுக்கான அஞ்சலிக் கூட்டத்தில விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. தேவர் அண்ணு இவ்வாறு கூறினர்.

விடுதலைப்போரில் வீரமரணமடைந்த பன்னிரண்டு போராளிகளின் உடல்களும் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்திற்கு மக்கள் அஞ்சலிக்காக கொண்டுவரப்பட்டது.

பெருந்திரளான மக்கள் போராளிகளின் பூதவுடல்களுக்கு வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர்.

திரு. தேவர் அண்ணு மேலும் கூறியதாவது; ஆனையிறவில் இன்று நடைபெறும் போர் தமிழீழத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் போர். எமது வீரர்களின் மனோவலிமை, தீரச்செயல்களால் சிங்கள இராணுவத்தினர் திகிலடைந்துள்ளனர். படைபலத்தை காட்டிலும் எம்மிடம் மனோபலம் நிறைய உண்டு. அம்மனோபலத்துக்கு துணைநிற்பது உங்களின் உற்சாகம் மிக்க ஆதரவே.

மரணித்த போராளிகள் ஒவ்வொருவரினதும் கனவினை நிறைவுசெய்ய அவர்கள் விட்டுச் சென்றுள்ள ஒவ்வொருவரின் துப்பாக்கிகளையும் தூக்கிப்போராட வீட்டுக்கொருவரேனும் முன்வரவேண்டும்.

எமது இன்றைய யுத்தத்துக்கு பொதுமக்களின் ஆதரவு நிறையவுண்டு. போராளிகளுக்கு தேவையான இரத்த தானம், உலர் உணவுகள், சாக்குகள், மண்வெட்டிகள் போன்றவற்றை நாம் கேட்டவுடன் உற்சாகமுடன் கொடுத்து உதவுவதுபோல. துணைப் படையில் சேர்ந்து போராளிகளுக்கு உதவவும், ஆயுதமேந்திப் போராடவும் நீங்கள் முன்வரவேண்டும்.

போராளிகள் வீரமரணமடைந்தால் கண்ணீர் விட்டு அழுவதுடன் அஞ்சலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதுடன் உங்கள் கடமை முடிந்து விட்டதாக கருதாதீர்கள். உங்கள் பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களை- தமிழீழத்தை- பூரணப்படுத்த எம்முடன் சேர்ந்து போராட முன்வாருங்கள்.

மாவீரர்களின் புகழுடல்கள் பாண்ட் வாத்தியங்கள் முழங்க, உடுவில் டச்சு வீதி, மருதனுமடம் ஊடாக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அக்கினியுடன் சங்கமமானது. [109]

## இந்திய அரசுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். உதவும்

[சென்னை]

இந்தியாவில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் கண்டுபிடித்து அங்கிருந்து வெளியேற்ற தமிழ்க்குழுக்கள் இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் உதவி செய்யுமென ஈ.பி.ஆர் எல் எவ் பிரமுகர் ஒருவர் பி.பி.ஸி.க்கு தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலும், ஓரிஸாவிலுமுள்ள தமிழ்க்குழுக்கள் உட்பட தமிழ் அகதிகள் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என இந்திய அரசு கூறிவருகிறதே என பி.பி ஸி. நிருபர் கேட்டபோது புலிகளையும அதன் ஆதரவாளர்களையும் வெளியேற்றுவதையே இது குறிப்பிடுகிறது என்றும் அவர் கூறினா.

இதேவேளை இந்திய அரசின் அறிவிப்பு மூலம் தமிழ்க்குழுக்களை சேர்ந்தவர்களும் அவர்களது உறவினர்களது வெளியேற்றமும் பெரும் சிக்கலை கொடுக்கும் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. [சி]

## இந்திய கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடிக்க ஏற்பாடு

[சென்னை]

இந்திய கடல் எல்லைக்குள்ளேயே இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க வகைசெய்யும் தமிழக அரசின் புதிய உத்தரவு கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துவளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி படகுகள் 15 எண்ணிக்கையுடன் 20 குழுக்களாக அதிகரிக்கப்படும். மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் இந்திய கடல் எல்லைக்குள்ளேயே இவர்கள் மீன் பிடிப்பதைப் பார்த்துக்கொள்ளவும் ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு காவலர் நியமிக்கப்படுவார். சக்தி வாய்ந்த வயலர்ஸ் கருவிமூலம் கடலுக்குள் மீன்பிடிக்கும் விபரம் பற்றி இராமேஸ்வரத்திலுள்ள வயர்லஸ் நிலையத்துக்கு அவர் அவ்வப்போது தகவல் தெரிவிப்பார்.

இதேவேளையில் இந்திய கடல் எல்லையைத் தாண்டும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் படகுகள் இந்திய அரசினால் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ஏழாலை மேற்கில் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்குப் பகுதிகளில் தொற்று நோய்கள் பரவும் அறிகுறிகள் தென்படுவதாக சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

அண்மையில் ஏழாலை லெனின் சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. வீ. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற சுகாதாரக் குழுக்கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது

ஏழாலைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு ஆர். முருகானந்தம் இக்கூட்டத்தில் பேசுகையில் மேற்படி பகுதிகளில் வசிக்கும் 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட பொதுமக்களுககு சலரோகம். குருதியமுக்கம் போன்ற தொற்று நோய்கள் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் இம்மாதம் 9-ம் திகதி இப்பகுதிகளில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் இப்பரிசோதனையில் சகலமக்களையும் பங்குபற்றுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

தெல்லிப்பளை சுகாதார பரிசோதகர் திரு. ஜே. விவேகானந்தனும் இக்கூட்டத்தில் உரையாற்றினர். (வி)

## ஆசிரிய மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்

(யாழ்ப்பாணம்]

ஆசிரிய தராதரப்பத்திர இறுதிப் பரீட்சை 1990, 1991 ஆகியவற்றை எதிர்நோக்கும் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் இம்மாதம் 20ந் திகதி தொடக்கம் சுமார் ஒரு வாரகாலம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவிருக்கிறது.

இவற்றில் சேர்ந்துகொள்ள விரும்புவோர் இம்மாதம் 16ந் திகதிவரை தமது பெயர்களை கலாசாலை அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

விடுதியில் தங்கிப் பயில விரும்பும் பெண்கள் இம்மாதம் 19ம் திகதி வேண்டிய ஆயத்தத்துடன் வரவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (153]

## தொலைக் கல்விப் பயிற்சி; 115 பேர் நியமனம்

[சித்தன்கேணி]

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி பிரிவின் ஒரு பிரிவில் தொலைக்கல்வி முறையின் கீழ் தொழில் விருத்தி அளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட 115 பயிற்சி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்படுகின்றன.

மாவட்ட சேவைத்திட்டத்தின்கீழ் நியமனம் பெற்றுள்ள பயிற்சி ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி முறையின்கீழ் தொழில்விருத்தி [பயிற்சி] அளித்தலுக்கு வட்டுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர், இளவாலை ஆகிய கொத்தணிப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 115 பயிற்சி ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வித்துறை பணிப்பாளரினால் நியமனக் கடிதங்கள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான இப்பயிற்சி நெறி இன்று 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டு இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. தொலைக்கல்வி நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் திரு. வ. உமாபதிசிவம் இப்பயிற்சிநெறிக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். (137)

## ராஜீவ் சமாதி அமைக்க ஒதுக்கப்பட்ட நிதி வாபஸ்

[புதுடில்லி]

காலஞ் சென்ற ராஜீவ் காந்தியின் சமாதி அமைப்பதற்காக ஒதுக்கியிருந்த நூறு கோடி ரூபாவை இந்திய அரசு வாபஸ் பெற்றுள்ளது.

ராஜீவ் காந்திக்குச் சமாதி கட்டுவதற்கு இந்திய அரசு நூறுகோடி ரூபாவை ஏற்கனவே ஒதுக்கியது இதைப் பலகட்சிகள் பலமாக எதிர்த்து வந்ததனால் அரசு நேற்று அத்திட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

ராஜீவ் காந்தியின் சமாதிப் பிரச்னை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால், அரசுக்கெதிராகப் பல கட்சிகள் வாக்களிக்கவேண்டியநிலை ஏற்பட்டு, அரசு தோல்வியடைய வேண்டிய சந்தர்ப்பம் உருவாகிவிடும் என்ற காரணத்தினாலேயே அரசு முன்கூட்டியே தனது நிதி ஒதுக்கீட்டை வாபஸ் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

## பிரார்த்தனை

(மானிப்பாய்)

தமிழினத்தின் விடிவுக்காக ஆனைக்கோட்டை ஸ்ரீவரதவிக்னவிநாயகர் ஆலயத்தில் அபிஷேகம், கூட்டுப் பிரார்த்தனைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும. (71)

## மூன்றும்தர அதிபர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

மூன்றும் தர அதிபர்களுக்கான பயிற்சி நெறி, இரண்டாம் தொகுதியினருக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு இவ்வருடம் பங்குபற்றுதவர்களும், கடமை பார்க்கும் அதிபர்களும், புதிதாக நியமிக்கப்பட்டவர்களும் பங்குபற்றலாம்.

பங்குபற்றுபவர்கள் தங்கள் பெயர்களை யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவப் பரிவில் பதிவுசெய்யலாமெனத் தெரிவிக்கப்படுகிறது (152

## இராணுவ அதிகாரிகள் தங்கள் பெயர்களை பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாமென கோரிக்கை

[கொழும்பு]

வடக்கு - கிழக்கில் யுத்த முனையில் நிற்கும் இராணுவ உயர் அதிகாரிகள் பலர் தங்கள் பெயர்களை பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாமென பத்திரிகையாளர்களிடம் உருக்கமாக வேண்டியுள்ளனர்.

வவுனியாவில் யுத்த முனையிலுள்ள ஒரு இராணுவ அதிகாரியை சந்தித்த 'சண்டே ரைம்ஸ்' நிருபர் இது பற்றி கூறுகையில்; இந்த அதிகாரி தனது பெயரை பிரசுரிக்க வேண்டாமென கோரியதாக கூறுகிறார்.

தான் யுத்த முனையில் நிற்பது தமது குடும்பத்தவர்களுக்கு தெரியாதென்றும், தென்பகுதியில் ஓரிடத்தில் கடமையாற்றுவதாகவே கூறியிருப்பதாகவும் இந்தப் பத்திரிகையை தனது மனைவி வாசிக்கும் பட்சத்தில் மிகுந்த அதிர்ச்சியடைவார் என்றும் கூறினர். தான் இங்கு நிற்பது அவர்களுக்கு தெரிய வேண்டாம். தான் இதனை எவ்வாறுதன் மனைவிக்கு கூற முடியும் தனது மனைவி தாய்மையடைந்திருப்பதால் இது அவரை மிகவும் பாதிக்கும் என்றார்.

மேலும் இதற்கு உதாரணமாக, தாம் பாதுகாப்பு காவலரண் ஒன்றினருகில் நின்றபோது புலிகளின் 'அருள் 89' மிக அருகில் வீழ்ந்து வெடித்ததில் தம்முடன்நின்ற படையினர் பலியானதாகவும் தாம் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் அவர் தெரிவித்துமுள்ளார்.

இந்தஅதிகாரியை போன்றே பல அதிகாரிகள் தங்கள பெயர்கள் பத்திரிகைகளில் வராதவாறு நடந்துகொள்கிறார்களாம். [சி]

## சிக்கன கடனுதவிச் சங்க நிர்வாக சபை மகளிர் வசம்

(உடுவில்)

எழுபத்தைந்து வீதத்துக்கு மேல் பெண்கள் அங்கத்துவம் வகிக்கும் மானிப்பாய் வடக்கு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க நிர்வாகப் பொறுப்பை புதிய பெண் நிர்வாகசபை பொறுப்பேற்றுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆண்டு பொதுச்சபைக் கூட்டத்தில் இப்புதிய பெண் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

திரு. இ. வல்லிபுரம்தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் திரு. இராஜ்குமார், மானிப்பாய் வடக்கு கிராமசேவையாளர் திரு ஆர். இராசயோகன், மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினா.

புதுநிர்வாகிகளாக தலைவர் செல்வி வ. ஜெயமதி, உபதலைவர் திருமதி எஸ். குணராசா, செயலாளர் திருமதி எஸ். யோகேஸ்வரன்' பொருளாளர் செல்வி எஸ். ஸ்ரீவதனி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். [109]

## காவிரி நீர் பிரச்னையால்

# தமிழக காங்கிரஸ் பிளவுபடும்

[சென்னை]

காவிரி நீர் பிரச்சனையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸில் பிளவு ஏற்படும் என்று வாழப்பாடி இராமமூர்த்தி எச்சரிக்கை செய்துள்ளார்

காவிரி நீர் ஆற்று பிரச்னை தொடர்பாக அண்மையில் மத்திய அமைச்சரவையிலிருந்து திரு. வாழப்பாடி இராஜினமா செய்தது தெரிந்ததே.

இந்த விடயத்தில் தாமதிப்பு தந்திரத்தை மத்திய அரசு கடைப்பிடிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினர்.

அவசர சட்டத்தை விலக்கிக் கொண்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத்தீர்ப்பை கர்னடகம் ஏற்றுக்கொண்டால் இதுதொடர்பாக பேச்சுவார்த்தைநடத்தலாம்என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

## ★ ஆனையிறவு பற்றி

# சுயாதீன செய்திகள் ஊர்ஜிதப்படுத்தவில்லை

[லண்டன்]

ஆனையிறவு முகாமினுள் காயமடைந்திருந்த படையினரை மீட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட செய்திகளைச் *சுயாதீன செய்தி ஸ்தாபனங்கள் எதுவும் ஊர்ஜிதப்படுத்தவில்லையென நேற்று நள்ளிரவு பி.பி.ஸி. தெரிவித்தது.

நள்ளிரவு வரை மிகக்குறைந்தளவு தகவலே அரசு தரப்பிலிருந்து கிடைத்ததாகவும் தெரிவித்தது. [சி]

## சாவகச்சேரியில்

# பீப்பா குண்டு வீச்சு இருவர் படுகாயம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரியில் நேற்று 'அவ்ரோ' விமானம் பீப்பாக் குண்டொன்றை வீசியதில் ஒரு சிறுவனும், ஒரு சிறுமியும் படுகாயமடைந்தனர். பலவீடுகள் சேதமுற்றன.

நேற்றுகாலை செருக்கல் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இக்குண்டு வீழ்ந்து வெடித்ததில் சி. ரூபினி [வயது-05] த. வனிதன் (வயது-09) காயமடைந்தனர்.

இக்குண்டு வீச்சால் மேற்படி ஆலயமும், பல வீடுகளும் சேதமுற்றன.

# கச்சதீவு பிரச்னை

## இலங்கை-இந்தியா பேச்சு

[சென்னை]

கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமை கொண்டுள்ளனர். அப்பகுதியில் மீன் பிடிப்பவர்களை இலங்கைக் கடற்படை துன்புறுத்தி வருகின்றது. இப்பிரச்சனை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சக மூலம் இலங்கையுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தமிழகம்வந்துள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத்பவார் மண்டபத்தில் செய்தியாளர் மத்தியில் நேற்று உரையாற்றும்போது கூறினர்.

இலங்கைஅகதிகள் பிரச்சனை மனிதாபிமான முறையில் அணுகப்படவேண்டிய தொன்றாகும். ஆனல் இந்த அணுகு முறையை தீவிரவாத முறைகளுக்கு பயன்படுத்துவதை இந்திய அரசு அனுமதிக்காது என்ருர். [பூ]

## மட்டு-பொலநறுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர். ஏனையோர் பன்னிச்சை இராணுவ முகாமுக்கு பின்வாங்கிச் சென்றனர்.

புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 2-ம் லெப்ரினன் ஜெயந்தன் [விநாயகமூர்த்தி விஜயகுமார்] வீரமரணமடைந்தார்.

இதேவேளை வெலிகந்த முகாமிலிருந்த மூன்று வாகனங்களில் முன்னேறிவந்த படையினர்மீது புலிகள் வடமுனை பாலத்தில் வைத்து மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 6 படையினர் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தினர் வந்த மூன்று வாகனங்களும் புலிகளால் தீமூட்டி எரிக்கப்பட்டதுடன் ஏனைய படையினர் முகாமுக்கு தப்பி சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா-சி)

## மன்ஞர் பயணிகள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலிருந்து மன்னார்த்தீவிற்குள் சென்று வரும அரச ஊழியர் உட்பட அனைத்துப்பிரயாணிகளும் தங்களின் சொந்தப் பகுதியின் கிராம சேவையாளரிடமோ அல்லது விடுதலைப்புலிகளின் பிரதேச அரசியல் பொறுப்பாளரிடமோ சிபார்சுக் கடிதம் பெற்று வந்தால் மாத்திரமே விடத்தல்தீவுச் செயலகத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். வர்த்தகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் கொழும்பு மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பபட்டுள்ளதாக தெரியவருகிறது.

எதுவித குற்றச்சாட்டுமின்றியே இவர்கள் கைது செய்யப்பட்டனராம். இவர்களை விடுவிக்க மேற்கொண்ட சகல முயற்சிகளும் பயனளிக்கவில்லையாம். (சி)

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன.

இராணுவ ரகசியங்கள் உட்பட பல முக்கிய தஸ்தாவேஜுகளுடன் இவர் நாட்டைவிட்டு வெளியேற முற்பட்டபோதே கைது செய்யப்பட்டாராம் இவர் கொழும்பில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் பொறியியலாளராகக் கடமையாற்றியவராம்.

இவர் அயல்நாடுகளுடன் தொடர்பு பட்டவரா அல்லது சர்வதேச உளவு அமைப்புகளுடன் தொடர்பு பட்டவரா என்பதுபற்றி விசாரிக்கப்பட்டு வருகிருராம். (சி)

## ★ வடமராட்சி கிழக்கில்

# தினமும் விமானத் தாக்குதல் 300 வீடுகள் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியான இயக்கச்சி, நித்திய வெட்டை, கேவில் சோரன் பற்று, ஆழியவளை, வண்ணங்குளம், சுண்டிக்குளம் பகுதிகளில் நேற்று யுத்தவிமானங்கள் கடும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின.

நேபாம் குண்டுகளும் வீசப்பட்டு அப்பகுதி காடுகள், எரிவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வளவு நாளும் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் 300க்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமாகியுள்ளன.

ஐந்துமைல்பிரதேசம் குண்டு வீச்சுகளால் கடும்பாதிப்புற்ற நிலையில் யுத்தகளம்போல் காட்சிதருகிறது என்று அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (56)

## முகாம் வாசலில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படைகள் மிக நவீன கனரக ஆயுதங்களைப் பிரயோகித்துள்ளது.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் இவ்விறுதிப் போர் ஆரம்பமானது. விமானப் படை முழுப்பலத்தையும் இவ்விறுதிப் போருக்குப் பயன்படுத்தியுள்ளது.

பல மணி நேரம் நடைபெற்ற இம்மோதலில் சிறிது சிறிதாக முகாமை நோக்கி முன்னேறிய படையினரைப் புலிகள் மிகவும் உக்கிரமாக தாக்கினர். பெருமளவு படையினர் இதில் கொல்லப்பட்டனர். எனினும் தமது கண்முன்னல் பெருமளவு படையினர் கொல்லப்பட்டபோதிலும் மிக அகோரமான தாக்குதலுடன் ஆயிரக்கணக்கான படையினர் தொடர்ந்தும் முன்னேறினர்.

இராணுவத்தின்மிகப்பெரும் பலம் இம்மோதலில் பிரயோகிக்கப்பட்டபோதும்தொடர்ந்தும் முகாம்பகுதியில் மிக உக்கிரமமான மோதல் நடைபெற்றவண்ணமிருப்பதாக இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரிவிக்கப்பட்டது. [சி]

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமினுள் நுழைந்தபடையினர் உடனடியாக படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலிருந்தவர்களை வெளியேற்றி சிகிச்சைக்காக அனுப்பியதாகவும் ஏனையவர்களுக்கு முன்னேறிய படையுடன் சென்ற மருத்துவ அணி முகாமினுள் வைத்து சிகிச்சை அளித்து வருவதாகவும் தெரிவித்தார்

இந்த முற்றுகையை முறியடிக்க படையினர் புலிகளின் மிகக் கடும் எதிர்ப்பை சந்திக்கவேண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். [சி]

## சினைப்பருக்கு சிப்பாய் பலி

[கொழும்பு]

பலாலியில் படையினரின் காவலரண் மீது புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

94, ரி-56 இரண்டு ரக துப்பாக்கிகள் -9 லிங்குடன்கூடிய ரவைகள் - 756, அதற்குரிய ரவைக்கூடுகள் 42, ரி 81 ரக துப்பாக்கிகள் 7, அதற்குரிய ரவைக்கூடுகள் 28, நடுத்தர ரவைகள் 1277, 2.03 எறிகணைகள் 16, ஜே ஆர். ரக கைக்குண்டுகள் 03, 60 மி. மீற்றர் எறிகணைகள் - 10, 60 மி. மீ மோட்டார் ஹோப்பிளஸ் 1, இராணுவக் கைத்துப்பாக்கி - 1, அதற்குரிய ரவைக் கூடுகள் 2, தொலைத் தொடர்பு சாதனம் -1. (மா-வி)

## பிரிட்டிஷ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

பிரிட்டிஷ் அரசின் இம் முடிவு வரவேற்கத்தக்க நல்ல தொருமுடிவென கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனைக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் வரவேற்றுள்ளன.

ஏனைய நாடுகளும் இதே போல் புலிகளை வெளியேற்ற வேண்டுமென்றும் இவர்கள் கோரியுள்ளனர். [சி]

## இந்தியாவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பி. பி. ஸி தெரிவித்தது.

ராஜீவ்காந்தியின்கொலையையடுத்தே தமிழர்களை வெளியேற்ற இந்தியா முடிவுசெய்ததாகவும் இதனையே பிரிட்டனும் பின்பற்றி திரு. கிட்டுவை வெளியேற்ற முடிவுசெய்ததாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## அவசர வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரி 11 ஆம் ஆண்டு, புதிய 12ஆம் ஆண்டு, 12 ஆம் ஆண்டு ஆகிய வகுப்பு மாணவர்களில் போராளிகளை பராமரிப்பிற்கு பெயர் பதிந்த அனைவரும், புதிதாகப் பெயர் பதிய விரும்புவோரும் இன்று காலை 10 மணிக்கு கல்லூரிக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் வடமராட்சியில் இயங்கும் முதலுதவி நிலையங்களில் கடமையாற்றும் அனைத்து அங்கத்தவர்களையும் அடையாள அட்டையுடன் இன்று 4-ஆம் திகதி காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பிரிவில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மீண்டும்போரா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கொல்லப்பட்டதாகவும் ஆனல் அரசுதரப்பு கூறும் அளவு, மிகக்குறைவாக இருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## கொழும்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தையடுத்து துறைமுகப்பகுதி உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகம் வரும் வெளிநாட்டு கப்பல்களை அனைத்தையும் பலத்த கண்காணிப்புடன் 3 நாட்களுக்குள் துறைமுகத்தைவிட்டு வெளியேற்றுமாறும் சுங்க அதிகாரிகளுக்கு கடும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் பெருமளவு கடற்படையினர்குவிக்கப்பட்டுமுள்ளனர். [சி]

## நன்றி நவிலல்

### அமரர் வி. எம். கணபதிப்பிள்ளை

எங்கள் குடும்பத்தலைவர் திரு. வி. எம் கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பிரச்னைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியிலும் தவருது சமுகமளித்து, எங்கள்துயரத்தில் பங்குகொண்டு சகல விதத்திலும் உதவிகளை வழங்கி, அன்னரது இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட உற்ருர், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், குறிப்பாகச் சரசாலை வாழ் மக்களுக்கும், போக்குவரத்துச் சிரமத்தின் மத்தியிலும் தூர இடங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்கும், இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமக்கு உரிய நேரத்தில் உதவிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் தமது கடைகளைப்பூட்டி அஞ்சலி செலுத்திய சாவகச்சேரி வர்த்தகர்களுக்கும், உரிய காலத்தில் மரணச் செய்தியைப் பிரசுரித்த தமிழீழத்தில் இயங்கும் சகல பத்திரிகை நிறுவனங்களுக்கும், வானெலிக்கு மரணச் செய்தியை அறிவித்த கொழும்பு நண்பர்களுக்கும், அந்திய கால சேவை நிலையமான வைற் ஹவுசினருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

V. M. K. குடும்பத்தினர்

சரசாலை வடக்கு.
சாவகச்சேரி.

(சி-5071)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180386/81